பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 29 புதன்கிழமை 15.10.2025 கதிர் 339

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் தோன்றிய கொள்கைக் கூட்டணி பற்றி காலைக்கதிர் வாசகர்களுக்கு நன்கு ஞாபகமிருக்கலாம். உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியைப் ☞ 2

# வருடாந்தம் 4 தடவை மின் கட்டண திருத்தம் தர்க்க ரீதியானதே அல்ல

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் கருத்து

வருடத்திற்கு நான்கு முறை மின்கட்டணங்களை திருத்துவது தர்க்க ரீதியானதல்ல என்பதுடன் நடைமுறைக் காரணிகள் மற்றும் தொழில்நுட்பக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு 2025இறுதிகாலாண்டுக்குமின்கட்டணத்தை அதிகரிக்காமல்இருக்கத்தீர்மானித்துள்ளோம். 2026 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் மின்கட்டணத்தைகுறைப்பதற்குரியசாதகமான சூழலைஉருவாக்கும்நிபந்தனைகள்மின்சார சபைக்கு விதிக்கப்பட்டுள்ளது என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் சந்ரலால் தெரிவித்தார்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் ☞ 2

# கோப்பாய் பொலிஸ் நிலைய காணி உரிமையாளரிடம் இன்று ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ள நிலையில், இன்று புதன்கிழமை நீதிமன்றத்தின் மூலம் குறித்த காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம்,கோப்பாய்,இராசபாதையில் அமைந்துள்ள கோப்பாய் பொலிஸ் நிலையம், கடந்த 30 வருடங்களாக பொலிஸாரின் கட்டுப்பாட்டிலும், பயன்பாட்டிலும் உள்ளது.

அந்தக் காணியின் உரிமையாளர்கள், காணியைத் தம்மிடம் கையளிக்குமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். எனினும், அதற்கு பயன்கிட்டவில்லை. பொலிஸ் நிலையம் அமைப்பதற்குப் பொருத்தமான காணி கிடைக்கவில்லை என்று தெரிவித்து ☞ 6

### நீதிமன்றத்தில் நடந்த கொலை வழக்கு சந்தேகநபரான

# இஷாரா செவ்வந்தி மிக விரைவில் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்

இலங்கையின் விசேட பொலிஸ் குழுவினால்கைதுசெய்யப்பட்டுள்ளஇஷாரா செவ்வந்திஉள்ளிட்டசந்தேகநபர்கள்விரைவில் நாட்டுக்கு அழைத்துவரப்படுவர். சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டள்ள திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 40 சந்தேகநபர்களில்18 பேர் இதுவரை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர் வூட்லர் தெரிவித்தார்.

திட்டமிட்ட குற்றச் செயல்களால் சேகரிக்கப்பட்ட 140 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான தங்கம் மற்றும் பணம் உள்ளிட்ட சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றத்தை உதாசீனப்படுத்தும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் சந்தேகநபர்களை வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விசாரணைகளும், சர்வதேச ☞ 2

# செம்மணிப் புதைகுழி அமைவிடத்தில் நாளாந்தக் கண்காணிப்புக்கு ஏற்பாடு

செம்மணி மனிதப்புதைகுழி வழக்கு விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில்,அதுவரைஅம்மனிதப்புதைகுழி அமைந்துள்ள பகுதியை குற்ற விசாரணைப்பிரிவுஅதிகாரிகள்நாளாந்தம் கண்காணிப்பதுடன் அரச மருத்துவ அதிகாரி வாரம் ஒருமுறை களப் பயணம் மேற்கொள்வார் எனவும், அப்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.ரி.வி. கமராக்கள் மூலம் சித்துபாத்தி இந்து மயான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தொடர்கண்காணிப்பில்ஈடுபடுவர்எனவும் காணாமல்போனோர்பற்றிய அலுவலகம் தெரிவித்துள்ளது.

செம்மணி மனிதப்புதைகுழியின் 3ஆம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளநிலையிலும்மழையால் பணிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தோண்டப்பட்ட பகுதிகளில் 2ஆம்கட்டப்பணிகள்முடிந்தபின்னர்,குழிகள் உரியவாறு மூடப்பட்டுப் பாதுகாக்கப்படாத காரணத்தால் மழைநீர் அதற்குள் தேங்கியுள்ளது. செம்மணி சதுப்பு நிலம் என்பதால் தொடர்ச்சியாக மழை பெய்தல், அப்பகுதி முழுவதும் வெள்ளநீரில் ☞ 2

# இலங்கை - சீன ஒத்துழைப்பு வேகத்தை தொடர்ந்துபேண சீன அதிபர் வலியுறுத்து

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் வேகத்தைத் தொடர்ந்தும் பேணுவதின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

சீனாவுக்கானதனதுஅரசுமுறைப்பயணத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ஹரிணி கிரேட் ஹால் மண்டபத்தில் சீன மக்கள் குடியரசின் அதிபர் ஜி ஜின்பிங்கைச் சந்தித்து இருதரப்பு பேச்சில்ஈடுபட்டசமயத்தில்சீனஅதிபர்இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான சமூக-பொருளாதார, கடல்சார் விடயங்கள் உள்ளிட்ட பன்முக ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துதல், ஒரு மண்டலம் ஒருபாதை திட்டத்தின் கீழ் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தி, முக்கிய அபிவிருத்தி கூட்டாண்மைகளுடன் முன்னோக்கிச் செல்லுதல் தொடர்பில் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

சீனாவுக்கு மூன்று நாள் பயணமாகச் சென்றுள்ள பிரதமர் ஹரிணி சீனாவின் பிரதமர் லீ சியாங்குடன் செவ்வாய்க்கிழமை பேச்சு நடத்தியிருந்தார். சர்வதேசநாணயநிதிய மறுசீரமைப்பின்செயற்திட்டத்துக்கமைய வெளிநாட்டு அரசமுறைக் கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதமர் ஹரிணி சீனப் பிரதமரிடம் வலியுறுத்தினார்.

இந்தப் பயணத்தின் முக்கிய அங்கமாக பிரதமருக்கும், சீன அரசுத் தலைவருக்கும் இடையிலான அரசுமுறைச் சந்திப்பு நேற்று பீஜிங்கில் உள்ள கிரேட் ஹாலில் நடைபெற்றது.

இலங்கையின் சீனாவுடனான ஈடுபாட்டை மேலும் ஆழப்படுத்துதல், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும் பல்வகைப்பட்ட ஒத்துழைப்பையும் மேலும்பலப்படுத்துதல் ஆகியன ☞ 2

### பெருந்தோட்ட தொழிலாளர்களின்

# அடிப்படைச் சம்பளத்தில் 10 ரூவாவேனும் 2025க்குள் அதிகரிக்க முடியுமா உங்களால்?

### அரசுத் தலைவருக்கு ஜீவன் தொண்டமான் சவால்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தில் இந்த ஆண்டு 10 ரூபாவையேனும் அதிகரித்துக் காட்டுமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும்நாடாளுமன்றஉறுப்பினருமான ஜீவன் தொண்டமான் அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்குச் சவால் விடுத்தார்.

கொழும்பிலுள்ளஇலங்கைத்தொழிலாளர் காங்ரஸ் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அரசுத் தலைவர் திஸாநாயக்க 1,750ரூபாநாட்சம்பளம்வழங்கப்படவேண்டும் எனக்குறிப்பிட்டுள்ளார். எமது ஆட்சிக்காலத்தில் சம்பள அதிகரிப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதுஎதிரணியிலிருந்தமலையகப் பிரதிநிதிகளால் எவ்வித ஒத்துழைப்புக்களும் வழங்கப்படவில்லை. மாறாக ☞ 6

# சமீபத்திய அமைச்சரவை மாற்றத்துடன் கொள்கலன் சர்ச்சைக்கு தொடர்பில்லை

### இப்படிச் சமாளிக்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

அரசுத் தலைவர் அநுரகுமார தீர்மானத்துக்கமையகடந்தவாரம்இடம்பெற்ற அமைச்சரவை மறுசீரமைப்புக்கும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் சுங்கத்துறையால் சர்ச்சைக்குரிய வகையில் 323 கொள்கலன்கள்விடுவிக்கப்பட்டதுதொடர்பாக நடைபெற்று வரும் விசாரணைகளுக்கும் தொடர்பிருப்பதாக முன்வைக்கப்படும் கூற்றைஅமைச்சரவைபேச்சாளர்அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நிராகரித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில், அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போது நேற்று இதனைத் தெரிவித்தார். இதன்போது அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் அமைச்சுப் பொறுப்பு மாற்றப்பட்டது குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அமைச்சரவை பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட விவகாரம் மற்றும் அதுபோன்று கடந்த காலத்தில் இடம்பெற்ற 14 சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் சுதந்திரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவற்றுக்கும் அண்மைய ☞ 2

# மின் கட்டண உயர்வைத் தடுத்தது ஐக்கிய மக்கள் சக்தியின் அழுத்தமே

### பெருமைப்படுகிறார் சஜித் பிரேமதாச

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தே அரசாங்கத்திற்குஅழுத்தம்பிரயோகிக்கப்படுகிறது. இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் அழுத்தத்தால் மின் கட்டண அதிகரிப்புக்கான முயற்சிதோல்வியடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நேற்று கண்டியில் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பிடிப்பதற்கு முன்பாக இந்தக் கூட்டணி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் தமிழ்த் தேசியப் பேரவை எனப்படும் சைக்கிளுக்கும்இடையேசெய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை இது. ஒற்றையாட்சியின் கீழான மாகாண சபைகள் வேண்டாம் என்று கூறும் தமிழ் காங்கிரஸ் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையில்தான் இந்த தமிழ்த் தேசியப் பேரவை உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் அரசுக் கட்சி உட்பட வேறு கட்சிகளில் இருந்து உதிர்ந்தவர்களும் சைக்கிளுடன் சேர்ந்து பேரவை தோற்றம் பெற்றது.

இப்போதுஇந்தக்கொள்கைக்கூட்டணிக்குள் 50 சதவீதப் பங்கைக் கொண்டிருக்கும் ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியினால் மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடாத்தப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், அதற்குரிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் நோக்கிலும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு ஒன்று இன்று யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ளடில்கோஹோட்டலில் பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ள இச்சந்திப்பில் ரெலோ எனப்படும் தமிழீழ விடுதலைஇயக்கம், புளொட்எனப்படும்தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகப்போராளிகள்கட்சி ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குஅழைப்புவிடுக்கப்படவில்லை. அதேவேளைதமிழ்த்தேசியப்பேரவைஎன்று முன்னணியோடுசேர்ந்துள்ளஉதிரிகளுக்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை. இணைந்த வட, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான வரதராஜப் பெருமாளும் இச்சந்திப்பில் கலந்துகொண்டு மாகாண சபையின்முக்கியத்துவம்குறித்தும்அதனைப் பலப்படுத்தவேண்டியதன்அவசியம்குறித்தும் வலியுறுத்தவுள்ளார்.

தமிழ்அரசுக்கட்சிக்கும்இந்தக்கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் கட்சி கூட்டத்திற்குச் செல்லுமா, யார் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என்பதை உறுதி செய்ய முடியவில்லை.

அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு, தாம் ஆட்சிபீடமேறி ஒரு வருடகாலத்துக்குள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும்என அதன் தேர்தல் அறிக்கையில் உத்தரவாதம் அளித்திருந்தது. ஆனால் அந்த வாக்குறுதி இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையில், மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை நாடளாவிய ரீதியில் பல்வேறு தரப்பினர் மத்தியில் இருந்தும் எழுந்திருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் மாகாண சபைத் தேர்தலை வலியுறுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தக் கூட்டம் கூட்டப்படுகின்றது என்று அறிய முடிந்தது. இன்றைய தினம் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குஇடையில்நடைபெறவிருக்கும் சந்திப்பில்மாகாணசபைத்தேர்தல்உடனடியாக நடாத்தப்படவேண்டியதன்அவசியம்குறித்தும், அதனைத்தாம்அனைவரும்ஒன்றிணைந்து வலியுறுத்தவேண்டியதன் தேவைப்பாடு குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

அதுமாத்திரமன்றி இச்சந்திப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் முறையான அரசியல் தீர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றியும் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள மாகாண சபையை ஏற்கமாட்டோம் என்று தொடர்ந்து (உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியைப் பிடித்த பின்னரும்) கூறிவரும் கஜேந்திரகுமார்தமதுகொள்கைக்கூட்டாளிகள் மாகாண சபை வேண்டும் வேண்டும் என்று கூட்டியுள்ள இந்தக் கூட்டம் குறித்து அடுத்த செய்தியாளர் மாநாட்டில் என்ன சொல்லப்போகிறார் என்று பார்ப்போம்!.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செம்மணிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூழ்கிவிடும். இதனால் இன்னும் ஒருசில மாதங்களுக்கு அப்பகுதியில் அகழ்வுப்பணிகளை முன்னெடுப்பது சாத்தியமில்லை என்பதும் நீதிமன்றத்திற்குச் சுட்டிக்காட்டப்பட்டது. அதனையடுத்து குறித்த வழக்கு நவம்பர் 3 வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தப்பின்னணியில்,காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் நேற்று வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் செம்மணிப் புதைகுழிப் பகுதியை நாளாந்தம் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எதிர்வரும்நவம்பர் 3 வரை மனிதப்புதைகுழி அமைந்துள்ள பகுதியைகுற்றவிசாரணைப்பிரிவுஅதிகாரிகள் நாளாந்தம்கண்காணிப்பதுடன்அரசமருத்துவ அதிகாரி வாரம் ஒருமுறை களப் பயணம் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடுஅப்பகுதியில்பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.ரி.வி கமராக்கள் மூலம் சித்துபாத்தி இந்து மயான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தொடர்ந்து கண்காணிப்பை மேற்கொள்வர் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று அடுத்தகட்ட அகழ்வுப் பணிகளுக்காக 19,106,000 ரூபா நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு நீதியமைச்சு ஒப்புதல் அளித்திருப்பதாக தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், தற்போதைய காலநிலை மற்றும் ஏனைய மனிதப்புதைகுழி வழக்குகள் உள்ளிட்ட தொடர் பணிகள் போன்றவற்றின் காரணமாக விசாரணை அதிகாரிகள் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகளைக்கட்டம்கட்டமாகப்பிரித்திருப்பதாக விளக்கமளித்துள்ளது.

## மின் கட்டண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற சந்திப்பில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மிகக் குறுகிய காலத்துக்குள் ஐக்கிய மக்கள் சக்தி மக்களுக்குப் பெரும் பணிகளை ஆற்றியிருக்கிறது. ஆளும்தரப்பும், மின்சார சபையும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க மின்சாரக் கட்டணத்தை 6.8 சதவீதத்தால் அதிகரிக்க முற்பட்டன. எனினும் இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக தற்போது அந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பதற்கான ஆளும்தரப்பின் தீர்மானத்தை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நிராகரித்துள்ளது. எதிர்க்கட்சியின் வகிபாகம் என்பது ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் இருந்து பேச்சு நடத்துவதல்ல. மாறாக மக்களுக்கு உண்மையான பொறுப்பை நிறைவேற்றுவதாகும். இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எடுத்த இந்த முடிவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளும்தரப்பின் நியாயமற்ற மின்சாரக் கட்டண அதிகரிப்பு, ஐக்கிய மக்கள் சக்தியின் அழுத்தத்தின் காரணமாகவே நிறுத்தப்பட்டது. எதிர்வரும் நாட்களில் இந்த மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். கடந்த தேர்தல் மேடைகளில் அரசுத் தலைவர் தலைமையிலான ஆளும்தரப்பு மின் கட்டணத்தை மூன்றில் ஒரு பங்கால் குறைப்பதாக வாக்குறுதியளிக்கப்பட்டது. வழங்கிய வாக்குறுதிக்கமைய மின்கட்டணம் குறைக்கப்படாவிட்டால் வீதிக்கிறங்கி போராடுவோம்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தே அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. தற்போதைய ஆளும் தரப்பினர் எதிர்க்கட்சியில் இருந்த போது, முந்தைய ஆளும்தரப்பு இணக்கப்பாடு எட்டிய நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதாக தெரிவித்தனர். ஆனால் தெளிவான அதிகாரத்தோடு ஆட்சியில் இருக்கும் இவர்கள் இன்னும் இந்த ஒப்பந்தத்தை மாற்றவில்லை.

அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிட்டு, சர்வதேச நாணய நிதியத்தின் அடிமைகளாக மாறிவிட்டனர். மக்கள் இப்போது மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். இன்று நாட்டின் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் ஏழ்மை நிலையை அடைந்துள்ளனர். மின்சாரக் கட்டணங்களை அதிகரித்து, சாதாரண மக்கள் மீது மேலும் அழுத்தத்தை ஏற்படுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இரகசிய ஒப்பந்தங்கள் அற்ற, மக்களைக் காட்டிக் கொடுக்காத, நடைமுறைக்கு ஏற்ற, மக்கள் நலன் சார்ந்த, எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி, நாட்டு மக்களின் மனித மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கும் - என்றார்.

## வருடாந்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மின்சார சபையானது 2025 ஒகஸ்ட் 27 அன்று இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கிய கட்டண திருத்த முன்மொழிவில் இந்த ஆண்டு இறுதிக் காலாண்டில் 7.7 பில்லியன் ரூபாய் வருமானப் பற்றாக்குறை ஏற்படும் ஆகவே நிதி நெருக்கடியை முகாமைத்துவம்செய்வதற்கு 6.8 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்று பரிந்துரை முன்வைத்தது.

2025 செப்டெம்பர் 30 மற்றும் ஒக்டோபர் 1 ஆகிய தினங்களில் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்த கடிதங்கள் மூலம் இந்த ஆண்டின் இறுதிக் காலாண்டில் நிதிப் பற்றாக்குறை 20.8 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கக்கூடும் என்று மின்சார சபை திருத்த யோசனைகளை முன்வைத்திருந்தது.

இருப்பினும், இலங்கை மின்சார சபையால் முன்வைக்கப்பட்ட திருத்த பரிந்துரைகள் தொடர்பான ஊழியர்களின் பகுப்பாய்வு, பொதுமக்களின் கருத்துக்கள் ஆகியவற்றுக்கு அமைய இறுதி காலாண்டுக்கு மின்கட்டணத்தை திருத்தம் செய்யாமலிருக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

2024 மற்றும் 2025 இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் ஐந்து தடவைகள் மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. 2024 ஜனவரி கட்டணத்துடன் தற்போதைய கட்டணத்தை ஒப்பிடும்போது, அது 44 சதவீதம் குறைந்துள்ளது.

மின்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்த பரிந்துரைகள்தொடர்பில்பொதுமக்களிடமிருந்து எழுத்துமூலமாகவும், வாய்மூலமாகவும் கருத்துக்கள் கோரப்பட்டன. இதற்கமைய சுமார் 500 எழுத்து மற்றும் வாய்மூலமான கருத்துக்கள் மற்றும் யோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இதற்கமைய 2025 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் மின்சார சபை முன்வைத்த மின்சார உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பான செலவினங்களிலிருந்து அநாவசியமான செலவினங்களைக் குறைக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. அதன் பின்னர் குறித்த நிதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், 2024 இறுதிக் காலாண்டிலும், 2025ஆம் ஆண்டின் முதல் இரு காலாண்டுகளிலும், மின்சாரசபை பெற்ற வருமானம் அண்ணவளாக 8,486 மில்லியன் ரூபாவைசீர்செய்ய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மின்சார சபை 22,875 மில்லியன் ரூபாவை தேறிய இலாபமாகப் பெற்றுள்ளது. மேலும் எதிர்காலத்தில் மின்சார கட்டணத்தை நிலையானதாகப் பேணுவதற்கு, 2025ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் அந்த 8487 மில்லியன் ரூபாய் மற்றும் மீதமுள்ள 16,975 மில்லியன் ரூபாயை 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இணைத்துக்கொள்ள ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இலங்கை மின்சார சபை மற்றும் தனியார் மின்சார நிறுவனம் ஆகிய நிறுவனங்களுக்க 7 நிபந்தனைகளை விதித்துள்ளோம். செலவுக் கணக்குகளைத் தயாரித்தல், மின்சார கொன்முதல் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வது, 2024ஆம் ஆண்டு மின்சார சபை பெற்றுக்கொண்ட 60,461 மில்லியன் ரூபாய் வருமானம், தொடர்பில் தடயவியல் கணக்காய்வினை மேற்கொண்டு, 2026ஆம் ஆண்டு முதல் காலாண்டுக்கான மின்சார கட்டணத் திருத்தத்தில், 16,975 மில்லியன் ரூபாய் இலாபத்தை முகாமைத்தும் செய்தல் ஆகியன இந்த நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சார உற்பத்திக்காக போட்டிவிலையில் எரிபொருளை கொள்வனவு செய்யுமாறு இலங்கை மின்சாரசபைக்கு இதற்கு முன்னர் நிபந்தனைகயை விதித்திருந்ததுடன், அது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது என்றார்.

## சமீபத்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை மாற்றங்களுக்கும் தொடர்பு இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

கடந்த ஒரு வருட காலமாக, நாம் இந்த அமைச்சுக்களை நிர்வகித்து வருவதால், அவற்றின் செயற்பாடுகள் குறித்து இப்போது எங்களிடம் தெளிவான புரிதல் உள்ளது. அதற்கேற்ப ஆளும்தரப்பு இப்போது வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்து, அதன் கொள்கைகள் மற்றும் வியூகங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு, இந்த பரந்த மறுசீரமைப்பு முயற்சியின் ஒரு பகுதியாகும் எனக் குறிப்பிட்ட அவர், ஆழ்ந்த இலக்குகளைக் கொண்ட சில அமைச்சுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு, நிர்வாகத் திறனை மேம்படுத்த பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர் எனவும் குறிப்பிட்டார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் முக்கியமான அபிவிருத்திப் பங்காளி நாடுகளில் ஒன்றாகச் சீனா இருப்பதால், இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் முக்கிய திட்டங்களில் அடைந்துள்ள உறுதியான முன்னேற்றத்தை எடுத்துரைத்த பிரதமர், உயர் தரமான ‘பட்டி மற்றும் பாதை முன்முயற்சியின் (தி பெல்ட் அண்ட் ரோட் இனிஷியேட்டிவ்) கீழ் சீன அரசின் தொடர்ச்சியான உதவியை எதிர்பார்க்கிறார் என்றும் எடுத்துரைத்தார்.

இதன்போது சமீபத்திய பொருளாதார மீட்சியில் இலங்கை அடைந்த வெற்றிகளுக்காக அரசுத் தலைவருக்கும், இலங்கை ஆளும்தரப்பிற்கும் சீன அரசுத் தலைவர் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். அத்துடன், வர்த்தகம், சுற்றுலா, கல்வி மற்றும் மக்களுக்கிடையிலான ஒத்துழைப்பு ஆகியத் துறைகளில் இலங்கைக்குத் தொடர்ச்சியான ஆதரவை அளிப்பதாகவும் உறுதியளித்த சீன அரசுத் தலைவர் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் வேகத்தைத் தொடர்ந்தும் பேணுவதின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

சமகால உலகளாவிய நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகிக்கும் சீன அரசுத் தலைவர் ஷீ ஜின்பிங் உலகளாவிய நிர்வாக முன்முயற்சிக்கு இலங்கையின் ஆதரவை தொடர்ந்தும் பெற்றுத் தருவதாகப் பிரதமர் மீண்டும் உறுதியளித்தார்.

## இஷாரா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றி வளைப்புக்களும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரதி பயனாக இதுவரையில் 40 சந்தேகநபர்களுக்கு எதிராகச் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இவ்வாண்டுக்குள் 18 சந்தேகநபர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி 19 கொழும்பு - புதுக்கடை நீதிமன்ற கட்டடத்துக்குள் கனேமுல்ல சஞ்சீவ என்ற சந்தேகநபர் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்த கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். எனினும் பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி தேடப்பட்டு வந்த நிலையில், நேற்றைய தினம் நேபாளத்தில் இலங்கையின் விசேட பொலிஸ் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார். இஷாரா செவ்வந்தியுடன் மேலும் ஒரு பெண் உள்ளிட்ட 5 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் விரைவில் நாட்டுக்கு அழைத்து வரப்படுவர். இவருக்கு தஞ்சமளித்த ஒரு சந்தேகநபரும் மேலும் 3 சந்தேகநபர்களும் பெண்ணொருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் கம்பஹா மற்றும் கொழும்பில் போதைப்பொருள் கடத்தல்களை வெளிநாடுகளிலிருந்து நிர்வகிக்கும் குழு இது எனவும் இனங்காணப்பட்டுள்ளது. இஷாரா செவ்வந்தி சட்ட விரோதமாக கடல் மார்க்கமாகவே தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகள் மூலம் சேர்க்கப்பட்ட சொத்துக்களை அரசுடைமையாக்கும் செயற்திட்டங்களும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய 2024இல் செப்டெம்பர் 21ஆம் திகதியிலிருந்து இது வரை 73 கோடி ரூபா பெறுமதியான 354 பவுண் தங்கம், 72 வாகனங்கள், 35 வீடுகள், 37 ஏக்கர் நிலப்பரப்பு, 67 கோடி ரூபா பணம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 6ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# வாடகை முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு சம்மாந்துறையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி





(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படும் வாடகைமுச்சக்கரவண்டிசாரதிகள் மற்றும் உரிமையாளர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒக்டோபர் 12 சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்தபிரதிப்குமார தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்களுக்கும் போக்குவரத்து விதிமுறைகள், மாணவர்கள்மற்றும் பொது மக்களுடன் பயணம் செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

மேலும், வாகனங்களை சட்டப்படி பதிவு செய்தல், சரியான ஆவணங்கள் வைத்திருத்தல், போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத பொருட்கள் கடத்தல் மற்றும் தவிர்த்தல் என்பன பற்றி சாரதிகள் வலியுறுத்தப்பட்டன.இக்கூட்டத்திற்கு சம்மாந்துறை பகுதியில் காணப்படும் சுமார் 100 க்கும் அதிகமான வாகன சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முதியோரினை கௌரவிக்கும் நிகழ்வு



(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக சமூக சேவை பிரிவினால் சர்வதேச முதியோர்தினத்தினை முன்னிட்டு வீரமுனை கிராமத்தில் வசித்து வரும் ரத்னம்எனும் 102 வயதுடைய முதியோரினை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று சம்மாந்துறைபிரதேச செயலாளர் ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.இதேவேளை முதியோர் தினத்தினை முன்னிட்டு பிரதேச செயலக பிரிவில் சிறந்த சமூக சேவையாளராக செயற்பட்ட வெள்ளையன் என்பவரும், சிறந்த கலைஞசராக அஸீஸ் ஆகிய இரு முதியோர்களும் பிரதேச செயலாளரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தலவாக்கலே இலங்கை வங்கி கிளையின் வாணி விழா



(கேதீஸ்)

இலங்கை வங்கி தலவாக்கலை கிளையின் வாணி விழா பூஜை நிகழ்வுகள் தலவாக்கலை கிளையின் முகாமையா எம்.ராமன் தலைமையில் நடைபெற்றது. பூஜைகளை தலவாக்கலை அருள்மிகு ஶ்ரீ கதிரேசன் ஆலய குருக்கள் சிவஶ்ரீ மு.வாமதேவ பிரசாந்த்குருக்கள் நடாத்தினார். இதன்போது இலங்கை வங்கி தலவாக்கலை கிளையின் முகாமையாளர் ராமன், இலங்கை வங்கி தலவாக்கலை கிளையின் உத்தியோகத்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய உலக ஒழுங்கு உருவாகுமா?

முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், திங்கட்கிழமை இஸ்ரேலுக்கு வந்தபோது, அந்நாட்டினர் கொடிகளும் முழக்கங்களும் எழுப்பி அவரை வரவேற்றனர்.

ஒரு காலத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் நட்சத்திரமாக விளங்கியவர், இன்று உலக அரசியலில் மிகப்பெரும் செல்வாக்குடைய ஒருவராக மாறியுள்ளார்.

காசா பகுதியில் நீண்ட நாளாக நடைபெற்ற குருதிச் சகதிக்கு இடையே, இஸ்ரேல் – ஹமாஸ் மோதலை இடைக்கால நிறுத்தத்திற்கு கொண்டுவந்தது டிரம்பின் “அமைதி முயற்சி” என அவருடைய ஆதரவாளர்கள் பெருமையாகக் கூறுகின்றனர்.

இஸ்ரேல் நாடாளுமன்றமான கென்ஸ்செத் (Knesset) அரங்கில் டிரம்ப் பேச்சாற்றியபோது, அவர் எழுந்து நிற்கும் வரவேற்பைப் பெற்றார்.

அவர், “இஸ்ரேல் மக்களின் நீண்ட மற்றும் வேதனையான துயர கனவு இப்போது முடிவடைந்தது” எனக் கூறியதும் கைதட்டல்கள் அரங்கம் முழுவதும் முழங்கின.

எனினும் சில எதிர்ப்பு குரல்களும் எழுந்தன; ஒருவரை பாதுகாப்புப் பணியாளர்கள் வெளியேற்றியதும் செய்தியாகியது.

### அமைதிக்கான முயற்சியா, அரசியல் விளையாட்டா?

டிரம்ப் இஸ்ரேலுக்கு வந்ததும், முன்னாள் கைதிகளின் குடும்பங்களுடன் சந்திப்பு நடைபெற்றது.

ஹமாஸ் தனது வசம் இருந்த கடைசி 20 இஸ்ரேல் கைதிகளை விடுதலை செய்தது; அதற்கு பதிலாக, இஸ்ரேல் 2,000 பாலஸ்தீன கைதிகளை விடுதலை செய்தது.

இது இடைக்கால அமைதி ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.

டிரம்ப் இதை “முழுமையான அமைதி திட்டத்தின் முதல் படி” எனக் கூறி, காசா பகுதியில் நிலையான அமைதி மற்றும் ஹமாஸ் ஆயுதம் ஒழிப்பின் நோக்கமாக இருப்பதாக தெரிவித்தார். எனினும், இதன் அடிப்படை வடிவமைப்பு பல மாதங்களாகவே பேச்சில் இருந்த ஒன்று.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹு முன்பு “ஹமாஸை முற்றிலும் அழிப்பேன்” என்று கூறியிருந்தாலும், அந்த அமைப்பு இன்னும் காசாவில் வலுவாகவே உள்ளது.

அதேபோல், ஹமாஸ் “இஸ்ரேலின் முழுமையான வெளியேற்றத்தையும், மறுபடியும் தாக்குதல் செய்யாது என்ற உத்தரவாதத்தையும்” கோரியிருந்தது ஆனால் அதுவும் இன்னும் உறுதியாகவில்லை.

### டிரம்பின் ‘அமைதி வரைபடம்’

இஸ்ரேலிலிருந்து டிரம்ப் எகிப்து சென்றார். அங்கு ஷார்ம்–எல்–ஷேக் நகரில் உலகத் தலைவர்களுடன் சந்திப்புகள் நடைபெற்றன.

டிரம்பின் 20 அம்சங்களைக் கொண்ட “அமைதி வரைபடம்” (Blueprint for Peace) பற்றி விவாதிக்க 20க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றன.

இந்தத் திட்டத்தின் கீழ், அனைத்து கைதிகளும் விடுவிக்கப்பட்ட பிறகு, ஆயுதங்களை கைவிடும் மற்றும் “அமைதியான ஒத்துழைப்பை ஏற்றுக்கொள்ளும்” ஹமாஸ் உறுப்பினர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும்.

வெளியேற விரும்புவோருக்கு பாதுகாப்பான பாதை ஏற்படுத்தப்படும்.

அதற்குப் பிறகு, ஐ.நா. வழியாக காசாவிற்கு உணவு, மருந்து மற்றும் எரிபொருள் உதவிகள் உடனடியாக அனுப்பப்படும்.

டிரம்ப், இதை மேற்பார்வை செய்ய “அமைதி வாரியம் (Board of Peace)” ஒன்றையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளார்.

### ‘அமைதி’ என்ற பெயரில் புதிய ஆட்சி ஒழுங்கா?

டிரம்பின் இந்த “தனியுரிமைத் தூதரகம்” உலகளாவிய அரசியல் ஒழுங்கை மாற்றி அமைக்கும் தொடக்கமாகக் கருதப்படுகிறது.

பல நாடுகள் இதை “புதுமையான ஒற்றை ஆட்சிக் கொள்கை – Might Makes Right Diplomacy” எனக் குறிக்கின்றன.

பல தசாப்தங்களாக உருவாக்கப்பட்ட பல்தர கூட்டமைப்புகள், மனிதநேய அடிப்படையிலான நெறிமுறைகள் அனைத்தும் இப்போது குறைந்துவரும் நிலையிலுள்ளன.

இது உலகில் புதிய ஆயுதப் போட்டியை தூண்டும் என்ற அச்சமும் நிலவுகிறது. அடுத்த தசாப்தம் திடீர் கலக்கங்கள், பொருளாதார அதிர்ச்சிகள், புதிய போர்கள் நிறைந்ததாக இருக்கக்கூடும்.

### சிறு நாடுகளுக்கான எச்சரிக்கை

இந்த உலக மாற்றத்தின் சுழலில், சிறிய கடல் தீவு நாடுகளுக்கு ஆபத்து இன்னும் பெரிதாகும்.

இலங்கை போன்ற நாடுகள் தங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி, தூதரக வலிமை, பல்தர கூட்டுறவு மற்றும் உளவுத்துறை நுண்ணறிவு ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டும்.

இது பொருளாதார பல்முகப்படுத்தல், புதிய சந்தைகள் உருவாக்கம் மற்றும் தொழில் வலுவூட்டல் வழியாக மட்டுமே சாத்தியம்.

நமது தீவு, வரவிருக்கும் உலக புயலை எதிர்கொள்ள, முன் தயாரிப்புடன் இருக்க வேண்டும்.

அதற்காக முதலில் நாம் தேசிய அடையாளத்தையும், ஒருமைப்பாட்டையும் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும்.

இன்றைய உலகம் “அமைதி” என்ற சொல்லின் பொருளையே மாற்றியிருக்கிறது. டிரம்பின் நடிப்பு அரசியலா, நிஜ அமைதியா என்ற கேள்விக்கு விடை இன்னும் தொலைவில் இருக்கலாம்.

ஆனால் ஒரு விஷயம் தெளிவாக இருக்கிறது —

அமைதியின் பெயரில் உலகம் புதிய குழப்பக் காலத்தின் வாசலில்தான் நிற்கிறது.

# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு திட்டமிட்டே தாமதிக்கப்படுகிறது

## ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

செம்மணி மனிதப் புதைகுழிகளை அகழ்வதற்குத் தேவையான நிதி மூலத்தைக்கண்டறிவதோ, போதிய நிதியை ஒதுக்குவதோ தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இயலாத ஒன்றல்ல. நிதியை ஒரேயடியாக விடுவிப்பதும் இயலாத ஒன்றல்ல.

ஆனால், அரசாங்கம் நிதியை கால இழுத்தடிப்புகளுக்குப் பிறகு, கட்டம் கட்டமாகவே விடுவித்து வருகிறது. செம்மணிப் புதைகுழிகளில் இருந்து மிகப்பெரும் எண்ணிக்கையில் எலும்புக்கூடுகள் ஒரேயடியாக வெளிப்படுவதை இந்த அரசாங்கம் விரும்பவில்லை, அவ்வாறு வெளிப்படுவது, படைத்தரப்பை ஒருபோதும் தண்டிக்க விரும்பாத தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உள்ளூரிலும் சர்வதேச அரங்கிலும் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும். இதனாலேயே, நிதியைக் காரணம்காட்டி செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு திட்டமிட்டே தாமதிக்கப்படுகிறது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் குற்றம்சாட்டியுள்ளார்.

அங்கு, அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், செம்மணியில் கிரிசாந்தி கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட சம்பவம் அரசாங்கத்துக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியதால் தவிர்க்கமுடியாமல் விசாரணைகளை முன்னெடுத்தது. இவ்வழக்கில் இராணுவச் சிப்பாய் சோமரட்ண ராஜபக்ச சாட்சியமளித்த போது தங்களால் 400பேர் வரையில் கொல்லப்பட்டதாகவும், அவர்களின் புதை குழிகளைத் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால், குற்றவாளி ஒப்புதல் வாக்குமூலம் வழங்கிய போதும் புதை குழிகளைத் தொடர்ந்து அகழ்வதற்கு அரசாங்கம் முன்வரவில்லை. அதற்கு வேண்டிய போதுமான அழுத்தங்களை எமது தலைமைகளும் அரசாங்கத்துக்குக் கொடுக்கவில்லை.

இப்போது, சிந்துபாத்தி மயானத்தில் கட்டுமானப் பணிகளுக்காக அகழப்பட்ட இடத்தில் தற்செயலாக வெளிப்பட்ட எலும்புக்கூடே இதுவரையில் இருநூறுகளுக்கும் அதிகமான எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை ஜனநாயக ரீதியில் முன்னெடுப்பதற்கான கதவுகளை முள்ளிவாய்க்கால் பேரவலம் திறந்து விட்டிருந்தது. ஆனால், அவற்றைத் தமிழ்த் தலைமைகள் கண்டுகொள்ளாமல் இலங்கை அரசாங்கத்துக்குச் சர்வதேச அரங்கில் பிணையெடுத்துக் கொடுக்கும் வேலைகளிலேயே ஈடுபட்டன.

இப்போது, இனவழிப்பின் சாட்சியங்களாக செம்மணிப் புதைகுழிகளில் இருந்து இருநூறுக்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் எழுந்து நிற்கின்றன. தமிழின அழிப்பு நிகழ்ந்தது என்பதற்கான சாட்சிகள் பலர் இன்னமும் உள்ளனர். அவர்களால் பயத்தின் காரணமாகத் தங்களை வெளிப்படுத்த இயலவில்லை. ஆனால், உயிருள்ள அந்த சாட்சியங்களைவிட உயிர் இல்லாத எலும்புக்கூடுகள் வலுவான சாட்சியங்களாக இன்று எழுந்து நிற்கின்றன. காலம் எங்களுக்குத்தந்திருக்கும் இந்த வாய்ப்பையாவது எமது தமிழ்த் தலைமைகள் இறுகப்பற்றிக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# சொறிக்கல்முனையில் காட்டு யானை அட்டகாசம்

(சகா தேவராஜா)

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சொறிக்கல்முனை -01 கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

சொறிக்கல்முனை கிராமத்தில் இரவு நேரங்களில் புகுந்த காட்டு யானை வீட்டை உடைத்து உணவுக்குவைத்திருந்த நெல்லையும் உறிஞ்சி சேதமாக்கியுள்ளது. சம்பவ இடத்திற்கு சென்ற பிரதேச சபை தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஜீஜின் மோசஸ் ஆகியோர் இதனை பார்வையிட்டனர். இதனை தொடர்ந்து வனவிலங்கு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் எடுக்க பணிப்புரை விடுத்தார்.

அறுவடை காலங்கள் நிறைவடைந்த பின்னர் கிட்டங்கி வாவியை அண்டிய நாணல் பகுதிகளில் பகல் வேளையில் கூட்டம் கூட்டமாக வரும் யானைகள் இரவு வேளைகளில் அண்மை கிராமங்களான வீரச்சோலை ,வீரமுனை சொறிக்கல்முனை ,சம்மாந்துறை போன்ற பகுதிகளுக்குள் புகுந்து உடமைகளையும்,உயிர் சேதங்களையும் ஏற்படுத்தி வருவதாகவும், இரவு வேளைகளில் அச்சத்துடனே கிராம மக்கள் உள்ளதாகவும் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் குற்றம் சாட்டியுள்ளார் .



# பூர்வீக வயல் காணிகளை மீட்டுத் தரக் கோரி போராட்டம்

(சகாதேவராஜா)

தமது பூர்வீக வயல் காணிகளை மீட்டுத் தருமாறு கோரி தொட்டாச்சுருங்கிவட்டை மற்றும் திருவள்ளுவர்புரம் பொது மக்களால் கவனயீர்ப்புப் போராட்டமும், ஜனாதிபதிக்கு மகஜர்கள் அனுப்பும் செயற்பாடு ஒக்டோபர் 13 சம்மாந்துறை மல்வத்தைச் சந்தியில் முன்னெடுக்கப்பட்டது.



ஆர்ப்பாட்டத்திலும் கவனயீர்ப்பு போராட்டத்திலும் கலந்து கொண்ட மக்கள் பல வித சுலோகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தி குரல் எழுப்பினர். 1983 ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளின் நிமித்தமாக எமது வாழ்விடங்கள், விவசாய நிலங்களைக் கைவிட்டு இடம்பெயர்ந்து சென்று பல வருடங்களின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சுமூகமான நிலையைத் தொடர்ந்து வருகை தந்து பார்த்தோம்.

எம்மிடம் போதுமான ஆவணங்களும் ஆதாரங்களும் இருந்த போதிலும்சுமார்57பேரின் விவசாயக்காணிகளைஅபகரித்திருந்தனர். அதேபோன்று மல்வத்தை திருவள்ளுவர்புரம் மக்களில் 1990 களில் ஏற்பட்ட அசாதாரண நிலைகளில் இடம்பெயர்ந்து சென்ற 11 குடும்பங்களின் குடியிருப்புக் காணிகளைத் தனிநபர் ஒருவருமாக அபகரித்தார். அத்துடன் ஆவணங்களும் ஆதாரங்களும் எதுவும் இன்றி விவசாயம் செய்து வருவதை அவதானித்தோம்.



இதுதொடர்பாகசம்மாந்துறைபிரதேசசெயலகம், அம்பாறை மாவட்ட செயலகம்மற்றும் கிழக்கு ஆளுநர்அலுவலகம்போன்றவற்றில்முறைபாடுகள் செய்தோம். பல அரசியல் தலைவர்களை சந்தித்து முறையிட்டோம். எதுவித தீர்வும் கிட்டவில்லை. இதனால்நாங்கள் இணைந்துஜனாதிபதியினுடைய கவனத்தை ஈர்க்கும் வகையிலே போராட்டம் முன்னெடுத்திருந்தோம் என பொதுமக்கள் தெரிவித்தனர்.

# கற்பித்தல் செயற்பாட்டிற்கு ரூ. ஒரு லட்சம் அன்பளிப்பு

(சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்தில் உள்ள நாவிதன்வெளி ஏழாம் கிராமம் கணேசாவித்தியாலய மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு ஒரு லட்சம் ரூபாய் அன்பளிப்பு செய்யப்பட்டது. அத் தொகையை பரோபகாரி ஜீவா விஜி தம்பதியினரின் சார்பில் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் சகாதேவராஜாவித்தியாலய அதிபர் கார்த்தியாயினி வழங்கி வைத்தார்.அவர் அங்கு ஏலவே மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டியை அன்பளிப்பு செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# பாதுகாப்பு, சுகாதார உணவு பழக்க வழக்கம் தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல்

(கேதீஸ்)

எதிர்வரும் தீபாவளி திருநாளை முன்னிட்டு கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட நகர மற்றும் எல்லை பகுதிகளில் மக்களுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரஉணவு பழக்கவழக்கம் தொடர்பான விழிப்புணர்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுகொட்டகலை பிரதேச சபையின் தலைவர் ராஜாமணி பிரசாந்த் தலைமையில் கொட்டகலைபிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில்பண்டிகை காலத்தில் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்துதேவையான பாதுகாப்பு வழங்கவும் மற்றும் தரமானபொருட்களை நியாயமான விலையில்விற்பனை செய்யவும் வலியுறுத்தியதுடன் அதிக விலைகளில் பொருட்கள் விற்பனைசெய்யப்படுமாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மற்றும் 18ம்,19 ஆம்திகதிகளில் தோட்ட வாரியாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் குறித்த கலந்துரையாடலில்பேசப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் கொட்டகலை பிரதேச சபையின் உப தலைவர் ஜேசுதாசன் யாகூலமேரி , உறுப்பினர் சுப்பையா மஹேந்திரன் மற்றும் பிரதேச சபையின் செயலாளர், கொட்டகலை பொது சுகாதார வைத்திய அதிகாரிசுதர்சன், திம்புள பத்தனை பொலிஸ் உத்தியோகத்தர் , லிந்துல பொலிஸ்உத்தியோகத்தர், கொமர்சல் இராணுவ முகாமின் உத்தியோகத்தர்கள் ,கொட்டகலைபொது சுகாதார வைத்திய நிலைய சுகாதார பரிசோதகர் என பலரும் கலந்துகொண்டனர்.

# சாதனை படைத்த மாணவனுக்கு அமோக வரவேற்பு.

(சக்திவேல்)

அகிலஇலங்கைபாடசாலைகளுக்குஇடையிலான மெய்வல்லுனர் போட்டியில்மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட களுதாவளைமகாவித்தியாலயம் தேசிய பாடசாலையைச் சேர்ந்த குகன் பகிர்ஜன் என்ற மாணவன்16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உயரம்பாய்தல் போட்டியில் கலந்து கொண்டு இலங்கையில் புதிய சாதனையைப் படைத்து முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவருடன்போட்டியிட்டஏனையமாணவர்களை வீழ்த்தி1.98 மீற்றர் உயரம்பாய்ந்து இலங்கையில் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில்புதிய சானையைப் பதடைத்துள்ளார். இப்போட்டிகள்ஒக்டோபர் 12 தியகம மஹிந்த ராஜபக்ஸவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றிருந்து.இந்நிலையில்அவரைமலர்மாலை அணிவிக்கப்பட்டு, வேண் வாத்தியங்கள்முழங்க வரவேற்கப்பட்டு, பின்னர் பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் வைத்து பாராட்டு விழாவும் நடைபெற்றது.

வித்தியாலயஅதிபர்சத்தியமோகன்தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக் கல்வி அதிகாரிகள்,முன்னாள் அதிபர்கள், பிரதியதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,பழையமாணவர்கள், கிராமமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





## இஷாரா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாண்டுஇதுவரையானகாலப்பகுதியில் 1268 கிலோ கிராம் ஹெரோயினுடன் 56,000 சந்தேகநபர்களும், 1863 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 64,690 சந்தேகநபர்களும்கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் 14,280 கஞ்சா மற்றும் கேரள கஞ்சா, 552 கிலோ கிராம் ஹசீஸ், 302 கிலோ கிராம் கொக்கைன் மற்றும் 35 இலட்சம் போதை மாத்திரைகள் என்பவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை குறித்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## கோப்பாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த இடத்திலிருந்து விலகப் பொலிஸார் மறுத்து வந்தனர்.

இந்த நிலையில், 2019ஆம் ஆண்டு, காணிகளுக்குசொந்தமான9உரிமையாளர்கள் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்

வழக்கு கடந்த 6 ஆண்டுகளாக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த நிலையில், 2025 ஜூன் 27 வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் வெளியேறி, அந்தக் காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டுமென மாவட்ட நீதிபதி சதீஸ்கரன் உத்தரவிட்டார். எனினும், இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை பொலிஸார் காணியை உரிமையாளர்களிடம் கையளிக்கவில்லை.

இந்த நிலையில், இன்று நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற, நீதிமன்ற பதிவாளர் கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பகுதிக்கு சென்று, அங்குள்ள பொலிசாரை வெளியேற்றி, காணியை உரிமையாளர்களிடம் கையளிக்கவுள்ளார்.

அதேவேளை கோப்பாய் பொலிஸ் நிலையத்தை உரும்பிராய் பகுதிக்கு மாற்றும் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. பகுதியளவில் இடமாற்ற நடவடிக்கைகள் முடிந்துள்ளன. எனினும், முழுமையான இடமாற்றம் நடந்து முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

## அடிப்படைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையூறுகளே ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இந்தஆளும்தரப்புசம்பளத்தைஅதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் நிச்சயம் நாம் அதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம். கடந்த ஆண்டு இடம்பெற்ற சம்பளப் பேச்சுக்களின்போது 1750 ரூபாவை நாம் அடிப்படைச் சம்பளமாகக் கோரியபோது, ஜே.வி.பி. தொழிற்சங்கள் 2,138 ரூபாவை அடிப்படை சம்பளமாகக் கோரின.

அதற்கமைய ஜே.வி.பி. தொழிற்சங்கம் இன்றும் 2,138 ரூபாவை அடிப்படை சம்பளம் என்ற நிலைப்பாட்டில் உள்ளதா? அவ்வாறில்லைஎனில்1700ரூபாநியாயமான சம்பளம்எனக்கூறுகின்றீர்களா? தொடக்கத்தில் 1700 ரூபா அடிப்படை சம்பளம் எனக் கூறப்பட்ட போதிலும், தற்போது அதனை நாட் சம்பளம் என்றே குறிப்பிடுகின்றனர். அடிப்படை சம்பளத்தில் எவ்வித அதிகரிப்பும் இன்றி மேலதிகக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதால் எவ்வித பயனும் இல்லை. அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்பட்டால் அதற்கு ஆதரவளிப்போம். அவ்வாறில்லை எனில் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. சம்பளபேச்சுகுறித்துஆளும்தரப்புக்குள்ளேயே தெளிவற்ற நிலைப்பாடு காணப்படுகிறது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் கூலி சம்பள முறைமை இல்லாதொழிக்கப்படவேண்டும் என அரசுத் தலைவரிடம் கேட்டுக் கொள்கின்றேன். தற்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கைகுறைவடைந்துள்ளதால்இதனை இலகுவாக நடைமுறைப்படுத்த முடியும். எமது ஆட்சியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தைக் குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. தற்போதைய ஆளும்தரப்பால் அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குச் செல்லமுடியும். ஆளும்தரப்பு நினைத்தால் குறித்த வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெற முடியும். 2020இல் 250 ரூபா சம்பள அதிகரிப்பை நாம் பெற்றுக் கொடுத்தோம். 2024இல் 350 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுத்தோம். எனவே முடிந்தால் இவ்வாண்டு அடிப்படை சம்பளத்தை 10 ரூபாவால் அதிகரித்துக் காண்பிக்குமாறு அரசுத் தலைவர்க்கு சவால் விடுக்கின்றேன் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு காணியை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி பழனி திகாம்பரம் கோரிக்கை

(கிஷாந்தன்)

' மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியை வழங்குவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.'- என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.



ஹட்டனில்நடைபெற்றஊடகசந்திப்பின் போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, ' மலையக மக்கள் தொடர்பில் ஜனாதிபதியே அதிகம் கதைத்திருந்தார். எனவே, பண்டாரவளையில் அசல் காணி உரித்து வழங்கப்படும் என நம்பி இருந்தேன். ஆனால் அவ்வாறு வழங்கப்படவில்லை. கடசாதிஆவணமேகையளிக்கப்பட்டுள்ளது. 2015 இல்நாம்ஆட்சிக்குவந்தபிறகுஇந்திய வீட்டுத் திட்டம் ஆரம்பமானது. ஒரிஜினல் டீட் வழங்கப்பட்டது. இது பொய்யென ஜீவன் தொண்டமான் நாடாளுமன்றத்தில் விமர்சித்திருந்தார்.

ஆனால் அவர்களின் ஆட்சியின்போது அவர் அதனையே வழங்கினார். நல்லாட்சி காலத்தில் எல்லோருக்கும் காணி உரிமை வழங்க முடியாமல்போனது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. தற்போதைய ஜனாதிபதி ஆட்சியின்கீழ் எமது மக்களுக்கு காணி உரிமை வழங்க முடியும். 10 பேர்ச்சஸை வழங்குமாறு நான் ஜனாதிபதியிடம் கோருகின்றேன். பணடாரளையில்கட்டப்படும்வீடுகளுக்கும் விரைவில் அசல் உரித்து வழங்கப்படும். நல்லாட்சி காலத்திலேயே மலையக பகுதிகளில் அதிகளவான வீடுகள் கட்டப்பட்டன. அதேவேளை, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கப்பெற்றால் நல்லது. ஆனால் கம்பனிகள் இன்னும் பதிலை வழங்கவில்லை. எனினும், வருட இறுதிக்குள் சம்பள உயர்வு கிடைக்குமென ஜனாதபதி கூறுகின்றார்.

இதனை நான் நம்பவில்லை. தோட்டங்களை மக்களுக்கு பிரித்து கொடுத்து, அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும். இந்திய வீட்டுத் திட்டத்தை விரைவில் நிறைவு செய்யுமாறு கோருகின்றேன். எமது மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியை வழங்கினால், அவர்களால் வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள முடியும்.

அதுவே சிறந்த திட்டம். நாம் களவெடுக்கவில்லை. மக்களுக்கும் இது தெரியும். எனவே, அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். சில அமைச்சர்கள் பொய்யுரைப்பதுதான் பிரச்சினை.' – என்றார்

# உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்

(சக்திவேல்)



'உதிரம்கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் இரத்ததான நிகழ்வொன்று மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப் பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்புபோதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் குருதித் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் தெட்சணகௌரி தினேஷின் வழிகாட்டலில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது பிரதேச செயலக உத்தியோகஸ்த்தர்கள், மற்றும் மண்முனைப் பிரதேச பொது அமைப்புக்கள், மற்றும் விளையாட்டுக் கழகங்கள், என பலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# பாடசாலைக்கட்டடம் திறந்து வைப்பு



புத்தளம், நாகவில்லுஎருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலத்திற்கு தேவையாகஇருந்தபாடசாலைக்கட்டடம் நேற்று பாடசாலையின் அதிபர் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் முயற்சியினால், 08 கோடி ரூபா நிதியில் அமைக்கப்பட்ட இக்கட்டிடத்தில் சுமார் 500றக்கும் மேற்பட்டவர்கள் அமருமளவான மண்டபம் உள்ளிட்ட வகுப்பறைகள் உள்ளன.



இந்நிகழ்வில் பாராளுமன்றஉறுப்பினர்பைஷல், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் புத்தளம் மாவட்ட மக்கள் காங்கிரஸ் அமைப்பாளருமான தாஹீர், புத்தளம் பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்டவர்களுடன் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# சிங்கள பாடநெறி நிறைவு; சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(ஹாரீஸ்)

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் (நிலட்) அரச ஊழியர்களுக்கான நடாத்தப்பட்ட 100 மணித்தியாலம் இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபையின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இரண்டாம் மொழி வளவாளர் புவாட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் மாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார். இதில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஹனீபா, சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் முஹம்மட், பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சுல்பா, இரண்டாம் மொழி பாட வளவாளர் சந்துனி மஹேஷிகா விஜயந்தி ஆகியோர்கள் கௌரவ அதிதிகளாக கலந்து



சிறப்பித்தார்கள்.

குறித்த நிகழ்வில் இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறிகளை பூர்த்தி செய்த பயிலுனர்களால் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு இடம்பெற்றது. இது 2020 ஆண்டு அரச கரும மொழி அமைச்சினால் வெளியிடப்பட்ட 18 ம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக அரச உத்தியோகத்தர்களின் மொழி புலமையை விருத்தி செய்யும் முகமாக மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நெறி என்பது குறிப்பிடத்தக்கது.




# ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்த இளைஞர்கள் கைது

(கிஷாந்தன்)

கொழும்பு, மருதானையில் இருந்து ஹட்டன் வழியாக வெலிமடை வரை சென்ற ஆட்டோவில் கஞ்சா, ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டனர் என சந்தேகிக்கப்படும் இருஇளைஞர்களை வட்டவளை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர். 25 மற்றும் 27 வயதுடைய வெலிமடை பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மருதானை பகுதியில் வாடகை ஆட்டோ ஓட்டுபவர்கள் என தெரியவந்துள்ளது. ஈசி கேஸ் முறையில் பணத்தை பெற்றுக்கொண்டு, வீதிகளில் அடையாளம் காணப்பட்ட சில பகுதிகளில் போதைப்பொருளை வைத்துவிட்டுச் செல்கின்றனர் என வட்டவளை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்தது. மருதானையில் இருந்து வெலிமடை நோக்கி இவர்கள் ஆட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த போது, வட்டவளை பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள சோதனைச் சாவடியில் அவர்களது ஆட்டோ நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டது. இதன்போது கஞ்சா, ஹெரோயின் மற்றும் ஐஸ் ஆகிய போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன. இவர்கள் வசமிருந்து 4 தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# சண்டிப்பாயில் இனம் தெரியாத நபர்களால் தாக்குதல்






நேற்று அதிகாலை மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாயில் முகமூடி அணிந்த நான்கு பேர் கொண்ட அடையாளம் தெரியாத குழு, மோட்டார் சைக்கிளில் வருகை தந்து தாக்குதல் மேற்கொண்டனர். இதன்போது வீட்டின் முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டியை மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்தனர்.

அதே இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் எடுத்துச் சென்று வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ள மல்லாகம் வீதியிலுள்ள உள்ள மாகியப்பிட்டி சந்தியில் வீதியில் வைத்து தீ வைத்தனர். அந்த நபர்கள் தப்பிய நிலையில் மானிப்பாய் பொலிசார் விசாரணைக்களை மேற்கொண்டுள்ளனர்.

# வறிய குடும்பம் ஒன்றுக்கு அரசு நிதியில் நிரந்தர வீடு

(சியாஜ்)

வண்ணத்துவில்லு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வண்ணத்துவில்லு வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட வறிய குடும்பம் ஒன்றிற்கு நிரந்தர வீடொன்று அரசாங்க நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டது இவ்வீடு நேற்று புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் மூலம் திறந்து வைக்கப்பட்டு உரிய குடும்பத்திற்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# புத்தளத்தில் ஜம்மியத்துல் உலமா தலைவருக்கு கௌரவம்

(சியாஜ்)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக்கிளையின் அழைப்பை ஏற்று புத்தளத்திற்கு வருகை தந்த அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் ரிஸ்வி முப்தி புத்தளத்தில் உள்ள தலைமைகளால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் புத்தளம் பெரிய பள்ளியின் பரிபாலன சபை தலைவர் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் நிஜாம் உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகர கிளையின் தலைவர் ஜிப்னாஸ் அல் மிஸ்பாஹி உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள், புத்தளம் மாநகர சபையின் மேயர் பொறியியலாளர் ரின்சாத் அஹ்மதின் பிரத்தியேக செயலாளர் ருஸ்தி ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டம்



வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக இடமாற்றம் வழங்ககோரி தொழிற்சங்க போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். கிளிநொச்சி, முல்லத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பணியாற்றுகின்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளி மாவட்ட சேவை காலத்தை நிறைவு செய்து பல ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், சரியான பொறிமுறையின் கீழ் இதுவரை இடமாற்றம் வழங்கப்படவில்லை என தெரிவித்து இந்த தொழிற்சங்க போராட்டத்தை அவர்கள் மேற்கொண்டனர். இதன்போது வடக்கு மாகாண ஆளுநரை சந்திப்பதற்காக மூவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் சந்தித்து கலந்துரையாடியதோடு மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.





# வலயக் கல்விப் பணிப்பாளராக சிவசங்கரி பதவி உயர்வு

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய ஆறாவது வலயக் கல்விப் பணிப்பாளராக சிவசங்கரி கங்கேஸ்வரன் நேற்று வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார். கிழக்கு மாகாண கல்விச் செயலாளரின் கடிதத்திற்கு அமைய குறித்த நியமனத்தை ஏற்றுக் கொண்டு கடமையை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய, கல்விப் பணிப்பாளர் பதவி உயர்வு பெற்றதை தொடர்ந்து குறித்த வலயத்திற்கான வலயக் கல்வி பணிப்பாளருக்கான வெற்றிடம் நிலவிய நிலையில் குறித்த பதவிக்காக விண்ணப்பம் கோரப்பட்டு, நேர்முக தேர்வும் இடம்பெற்றுள்ளது.

# குருக்கள்மடத்தில் தென்னம் தோப்பிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு.



மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் தென்னம் தோப்பிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தார். இச்சம்பசவம்தொடர்பில்மேலும் தெரியவருவதாவத..

குருக்கள்மடம் தென்னம் தோப்பில் ஆண் ஒருவரின் கடலம் கிடப்பதாக அப்பகுதி பொதுமக்கள் களுவாஞ்சிகுடி பொலிசாருக்கு வழங்கிய தகவலுக்குகமைய இஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் சடலத்தை மீட்டுள்ளனர். இந்நிலையில் களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்னற நீதிபதி பிரதீபனின்உத்தரவுக்கமையஅங்குவிஜயம்செய்த களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரிசிதம்பதப்பிள்ளைஜீவரெத்தினம்சடலத்தை பார்வையிட்டபின்னர்பிரேதபரிசோதனைகளுக்காக சடலத்தைகளுவாஞ்சிகுடிஆதாரவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் சடலமாக மீட்கப்பட்டவர் குருக்கள்மடம் கிராமத்தைச் சேர்ந்த 81 வயதுடைய கதிர்காமத்தம்பி சேமசுந்தரம் என அடையாம் காணப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிகுடி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனைக் கண்காட்சி

(சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் உற்பத்தி விற்பனையாளர்களின் சந்தை மற்றும் கண்காட்சி நிகழ்வானது நேற்று பிரதேச செயலாளர் உதயஸ்ரீதர் தலைமையின் கீழ், உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரனின் பங்குபற்றுதலுடன் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதுடன், நுகர்வோர்களிடம் இருந்து வருகின்ற கேள்விகள் மற்றும் விற்பனை வாய்ப்புகளை சலுகை விலையில் மக்கள் கொள்வனவு செய்வதற்கு இக் கண்காட்சி மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் போது பிரதேச செயலக பிரிவிலிருந்து 20 இற்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்கள் தங்களது உற்பத்தி மற்றும் கைவினை பொருட்களை காட்சிப்படுத்தியதுடன், விற்பனையும் செய்திருந்தனர். இந் நிகழ்வில் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகரத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் மற்றும் விற்பனையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர் .













இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2025இல் வெளியிடப்பெற்றது